Dinamalar 15/5/13

# தமிழ் டிஜிட்டல் நூலகத்திற்கு ரூ.50 லட்சம் நன்கொடை



'பாலம்' கல்யாணசுந்தரத்தின், 73வது பிறந்த நாள் விழா சென்னையில் நடந்தது. உடன், [இடமிருந்து] விஜய் ஆனந்த், யோகா மாஸ்டர் பரமசிவம், தொழிலதிபர் வியோமுத்து, 'பாலம்' கல்யாணசுந்தரம், சென்னை ஐகோர்ட்டின் ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு, 'கலைமகள்' ஆசிரியர் கீழாம்பூர் சங்கரசுப்ரமணியன்

சென்னை, மே 14-

சென்னையில் தமிழ் டிஜிட்டல் நூலகத்திற்கு, ஐந்து ஏக்கர் நிலமும், 50 லட்சம் ரூபாயும் நன்கொடையாக அளிப்பதாக, தொழிலதிபர் வியோமுத்து அறிவித்து உள்ளார்.

சென்னையில் சமீபத்தில், 'பாலம்' கல்யாணசுந்தரத்தின் பிறந்த நாள் விழா நடந்தது. அதில், சென்னை ஐகோர்ட் நீதிபதி சந்துரு, தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலர் தா.பாண்டியன், தொழிலதிபர் வியோமுத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

'பாலம்' கல்யாணசுந்தரம் உருவாக்கியுள்ள தமிழ் டிஜிட்டல் நூலகத்திற்கு, ஐந்து ஏக்கர் நிலமும், 50 லட்சம் ரூபாய் நன்கொடீயும் அளிக்க இருப்பதாக, வியோமுத்து அந்த நிகழ்ச்சியில் அறிவித்தார். விழாவில், மாணவ, மாணவியருக்கு கல்வி உதவியும், ஏழைகளுக்கு மருத்துவ உதவியும் அளிக்கப்பட்டன.

4c தினமலர் சென்னை செவ்வாய் 14-5-2013



சென்னை மேற்கு தாம்பரம், ஸ்ரீசாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி கல்லூரியில் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தை, சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் தலைவரும், நிர்வாக இயக்குனருமான மோகன் வி.தன்க்சலே திறந்து வைத்தார். உடன், கல்லூரியின் நிறுவனர் மற்றும் தலைவர் அரிமா.லியோ முத்து, சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் மண்டல மேலாளர் அக்பர் அலி, வங்கியின், முதுநிலை பிராந்திய மேலாளர் தியாகராஜன், தி.நகர் கிளை மேலாளர் கூத்தையன், கல்லூரி செயலர் வாசு, முதன்மை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ், கல்லூரி முதல்வர் பழனிக்குமார்.